THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 30th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

MR. SPEAKER : Short Notice Question No. 4 is postponed because the Hon. Minister for Industries is otherwise engaged.

Questions Nos. 442, 446, 448, 449, 451, 452 and 460 are alos postponed.

Questions to be answered by the Hon. the Chief Minister are also postponed. But if he comes before the question hour is over, those questions will be taken up.

Distribution of text-books by the Harijan Welfare Department

* 441 *Q.*—SRI T. P. ALAGAMUTHU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the value of Text-books acquired for distribution to students by the Harijan Welfare Department during the Academic Year 1962-63; and

(*b*) the value of Text-books, remaining in stock, after distribution during the same year ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A statement[a] is placed on the Table of the House.

சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட புத்தகங்களின் விலைப் பட்டியல் தான் தரப்பட்டிருக்கிறது இதனால் எத்தனை மாணவர்கள் பயன் அடைந்தார்கள் என்கிற தகவல் அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி வேண்டும்

திரு. து. ப. அழகமுத்து : மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகங்கள் போக பாக்கி எவ்வளவு புத்தகங்கள் மீதியாக இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

---

a Printed as Appendix I on pages 729–730

[30th March 1964

கனம் திரு. பூ. கக்கன்: ஏற்கெனவே மேஜை மீது வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்தால் தெரியும், எவ்வளவு பாக்கி இருக்கிறது என்பதற்கு.

Employment to Scheduled Castes (Report)

* 443 *Q.*—SRI A. ARUMUGAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received the report of the Special Officer, Sri P. P. I. Vaidyanathan, I.C.S. regarding the employment position of the Scheduled castes and Scheduled Tribes in the Government services in the State; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the Table of the House ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Yes, Sir.

(*b*) Copies of the report are available in the Legislature Secretariat Library.

(அ) ஆம்.

(இ) இந்த அறிக்கையின் நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் உள்ளன.

திரு. ஏ. ஆறுமுகம்: சார், நம் மாநில சர்க்காரிலே இருக்கின்ற இலாக்காக்களில் கொடுக்கப்படவேண்டிய சதவிகிதம் உத்தியோகம் கொடுக்கப்படவில்லை, 16 சதவிகிதம் குறைந்தது கொடுக்கப்படவேண்டும் என்பதற்கு அவர்கள் கொடுத்திருப்பது 3½ சதவிகிதம்தான் இருக்கிறது. அதை சர்க்கார் கவனித்தார்களா ? கவனித்திருந்தால் இனி பிற்காலத்திலாவது அதிகமாகக் கொடுக்க நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன்: இதுபற்றியெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு ஸ்பெஷல் அதிகாரியையே போட்டோம். அவர் சமர்ப்பித்த ரிபோர்ட் அரசாங்கத்திடம் இருக்கிறது, நூலகத்திலும் வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தால் தெரியும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: அந்த அறிக்கையைச் சபை முன்பு வைப்பதற்கு என்ன நஷ்டம் என்று கேட்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: சிறிது பணம் செலவாகும். சிக்கனத்திற்காகத்தான் வைத்திருக்கிறோம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: எல்லோரும் லைப்ரரியில் இருக்கும் காப்பிகளை ஒரே சமயத்தில் பார்ப்பது என்றால் முடியாது ஆகவே இனிமேலாவது இத்தகைய ரிப்போர்ட்டுகளை சபை முன்பு வைப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன்: ரிபோர்ட் ஒரு காப்பி இல்லை, ஐந்து காப்பி வைக்கிறோம். கனம் அங்கத்தினர் நூலகத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

கனம் சபாநாயகர்: அடுத்த செஷனுக்குள் படிக்கலாம்.